***கவனிக்க.-*** *2009.10.02 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II மற்றும் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 1623 - 2009 ඔක්තෝබර් 09 වැනි සිකුරාදා - 2009.10.09**

*1623 ஆம் இலக்கம் - 2009 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 09 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1358 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 1359 |


***வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான***

## *முக்கிய அறிவித்தல்கள்*

*இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தில், வராராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை - நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2009, ஒற்றோபர் மாதம் 16 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2009, ஒற்றோபர் மாதம் 02 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

***லக்ஷ்மன் குணவர்தன,***
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2009 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

*1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.*

*1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களும் ஏற்புடைத்தாகாது).*

*1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.*

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

*2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.*

*2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.*

*அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.*

*2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.*

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

*3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-*

*3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.*

*3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.*

*3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.*

*3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.*

*3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.*

*3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத்தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.*

*3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.*

*3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.*

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

*4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.*

*4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.*

*4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.*

*4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.*

**5. யுத்த சேவைச் சலுகை :**

*5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.*

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

*6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.*

*6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.*

*6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.*

*6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.*

*6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.*

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

*7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.*

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

*இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந்திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந்திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந்திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.*

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந்தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு, இறப்பு பதிவுசெய்கின்ற பதிவாளர் பதவி - இரத்தினபுரி மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்கின்ற பதிவாளர் பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்கின்ற பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளிகளாகவும், பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாயும் இருத்தல் வேண்டும்.

3. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் மட்டும் விண்ணப்பிக்க முடியும்.

4. விண்ணப்பதாரரின் வயது 21 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 65 வருடங்களுக்கு மேற்படாதும் இருத்தல் வேண்டும்.

5. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

6. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரம் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

7. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

8. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2009, கார்த்திகை மாதம் 09 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் அலுவலகம்,
இல. 234/ஏ3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2009, புரட்டாதி 18.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| இரத்தினபுரி | இம்புள்பே | மொரகல பிரிவில் பிறப்பு, இறப்பு மற்றும் கடவத்த மத்திய கோரளை பிரிவில் விவாகம் (கண்டிய மற்றும் பொது) பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலாளர் அலுவலகம், இரத்தினபுரி. |
| இரத்தினபுரி | இம்புள்பே | இம்புள்பே பிரிவில் பிறப்பு, இறப்பு மற்றும் கடவத்த மத்திய கோரளை பிரிவில் விவாகம் (கண்டிய மற்றும் பொது) பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலாளர் அலுவலகம், இரத்தினபுரி. |

10-254

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## சுகாதார பராமரிப்பு மற்றும் போசணை அமைச்சு

### குடும்ப நல சேவை உத்தியோகத்தர் பயிற்சிக்கான மாணவர்களை ஆட்சேர்த்தல் - 2009

12.08.2009 ஆந் திகதிய அமைச்சரவைப் பத்திரத்தின் அமைச்சரவைத் தீர்மானத்திற்கமைவாக சுகாதார பராமரிப்பு மற்றும் போசணை அமைச்சில் குடும்ப நல சேவை உத்தியோகத்தர் பயிற்சிக்காக தகைமையுள்ள திருமணமாகாத பெண் இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. மாவட்டங்களில் உள்ள வெற்றிடங்களுக்கு அமைய ஆட்சேர்த்தல் இடம்பெறும்.

2. பயிற்சிக்கு தெரிவுசெய்யப்படும் மாணவர்களின் எண்ணிக்கை மாவட்டத்திலுள்ள சனத்தொகை அடிப்படையில் அமையும்.

3. இது ஓர் முழுநேரப் பயிற்சிநெறி என்பதால் வேறு பயிற்சிநெறிகளைத் தொடர்பவர்கள் விண்ணப்பிக்க முடியாது.

**4. கல்வித் தகைமைகள் :**

(அ) கீழே கொடுக்கப்பட்ட கல்வித் தகைமைகள் கோரப்படுகின்றன :-

| தொடர் இல. | பயிற்சிநெறி | க. பொ. த. (உ.த.) தகைமை | க. பொ. த. (சா.த.) தகைமை | ஏனைய தகைமைகள் |
|---|---|---|---|---|
| 1 | வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தவிர்ந்த ஏனைய மாகாணங் களுக்கும் கொழும்பு மாநகர சபைக்குமான வெற்றிடங்கள் நிரப்புவதற்காக | க. பொ.த. (உ.த.) பரீட்சை ஏதாவது ஒரு பிரிவில் ஒரே அமர்வில் 3 பாடங்களில் சித்தி (விஞ்ஞான பிரிவு பாடங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.) | க. பொ. த. (சா.த.) பரீட்சையில் ஆங்கில மொழி உட்பட ஆறு பாடங்களுக்குக் குறையாமல் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் சித்தியுடன் சிங்களம்/ தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம், மேலும் ஒரு பாடத்தில் திறமைச் சித்தியும் அடைந்திருத்தல் வேண்டும். | தகைமையுடையவர் கள் க. பொ. த. (உ/த) 2002-2007 பரீட்சையின் Z புள்ளிகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட முதன்மை அடிப்படையில் தெரிவுசெய்யப் படுவர். |
| 2 | கிழக்கு மாகாணத்தில் மட்டும் சேவைக்கு அமர்த்தப்பட உள்ளவர்கள் | க. பொ.த. (உ.த.) பரீட்சை கவனத்தில் எடுக்கப்பட மாட்டாது. | க. பொ. த. (சா.த.) பரீட்சையில் ஆங்கில மொழி உட்பட ஆறு பாடங்களுக்குக் குறையாமல் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் சித்தியுடன் சிங்களம்/ தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம், மேலும் ஒரு பாடத்தில் திறமைச் சித்தியும் அடைந்திருத்தல் வேண்டும். | |
| 3 | பெருந்தோட்ட வைத்தியசாலை களில் சேவைக்கு அமர்த்தப் பட உள்ளவர்கள். | க. பொ.த. (உ.த.) பரீட்சை கவனத்தில் எடுக்கப்பட மாட்டாது. | க. பொ. த. (சா.த.) பரீட்சையில் ஆங்கில மொழி உட்பட ஆறு பாடங்களுக்குக் குறையாமல் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் சித்தியுடன் சிங்களம்/ தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம், மேலும் ஒரு பாடத்தில் திறமைச் சித்தியும் அடைந்திருத்தல் வேண்டும். | தமிழ் மொழியில் உரையாடக் கூடியவர்களாக இருக்க வேண்டும். |

**5. ஏனைய தகைமைகள் :**

(அ) 18 வயதிற்கு குறையாமலும் 30 வயதிற்கு மேற்படாமலும் 16.11.2009 இல் இருக்க வேண்டும்.

(ஆ) உடல்வலுவும் - சுகதேகியாகவும் இருக்க வேண்டும்.

(இ) 04 அடி 10 அங்குலம் (148 செ. மீ.) உயரத்திற்கு குறையாமல் இருக்க வேண்டும்.

(ஈ) கட்டாயமாக திருமணமாகாதவராக இருக்கவேண்டும். அத்துடன் பயிற்சிக்காலத்திலும் பயிற்சி முடிந்தபின் தற்காலிகமாக சேவை புரிய நேரிட்டாலும் நிரந்தர நியமனம் வழங்கும்வரை திருமணம் செய்ய முடியாது.

(உ) (i) பந்தி 4 (அ) தொகுதி இல. 01 இன் கீழ் அடங்கும் விண்ணப்பம்.
வடக்கு, கிழக்கு மாகாணங்களைத் தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் விண்ணப்பிப்பவர்கள் தாங்கள் விண்ணப்பிக்கும் மாவட்டத்தில் 3 வருடங்கள் விண்ணப்பிக்கும் காலத்திலிருந்து முன்பாக வசித்து வருகிறார் என்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

(ii) பந்தி 4 (அ) தொகுதி இல. 02 இன் கீழ் அடங்கும் விண்ணப்பம்.
கிழக்கு மாகாணத்தில் விண்ணப்பிப்பவர்கள் தமது சேவைக்காலம் முழுவதும் கிழக்கு மாகாணத்திலேயே சேவையாற்ற வேண்டும். அத்துடன் விண்ணப்பிக்கும் மாவட்டத்தில் 3 வருடங்கள் விண்ணப்பிக்கும் காலத்திலிருந்து முன்பாக வசித்து வருகிறார் என்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

(iii) பந்தி 4 (அ) தொகுதி இல. 03 இன் கீழ் அடங்கும் விண்ணப்பம்.
தமிழ் மொழியில் உரையாடக்கூடிய ஆற்றலுடன் 3 வருடங்கள் விண்ணப்பிக்கும் மாவட்டத்தில் தொடர்ந்து வசித்துவந்ததை உறுதிப்படுத்த வேண்டும். சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்துடன் சேவைக்காலம் முழுவதும் பெருந்தோட்டப்பகுதியில் சேவையாற்றுவேன் என ஓர் ஒப்பந்தம் செய்தல் வேண்டும்.

5. பெருந்தோட்டப் பகுதிக்கான குடும்ப நல சேவை உத்தியோகத்தர்களுக்கான மாவட்டங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :-

நுவரெலியா/ கண்டி/ மாத்தளை/பதுளை/ மொனராகலை/ இரத்தினபுரி/ கேகாலை/ கொழும்பு/ காலி/ மாத்தறை/ குருநாகல்.

6. **விண்ணப்பிக்கும் முறை**.- (அ) பந்தி 04 (அ) வில் தொடர் இல. 01, 02, 03 என்பவற்றிற்கான தனித்தனி மாதிரி விண்ணப்பப்படிவங்கள் உள்ளன. அதில் விண்ணப்பதாரர் தமக்குரிய பிரிவிற்கான சரியான விண்ணப்பப்படிவத்தைத் தெரிவுசெய்து விண்ணப்பிக்கவும். மூன்று பிரிவுகளுக்கும் விண்ணப்பிப்பவர்கள் தனித்தனியான விண்ணப்பங்களை அனுப்பிவைக்கவேண்டும்.

பி. கு. பந்தி 04 (அ) தொடர் இல. 01 இன் கீழ் விண்ணப்பிப்பவர்கள் தாங்கள் வடக்குக் கிழக்கு தவிர்ந்த ஏனைய மாகாணங்கள் அல்லது கொழும்பு மாவட்டம் என்பதைத் தெளிவாக குறிப்பிடவேண்டும்.

(ஆ) இவ்வறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்துக்கமைய ஏ4 தாளில் விண்ணப்பத்தை பூர்த்தி செய்து அதில் உள்ள முத்திரைக்குரிய கூட்டில் ரூபா 500 பெறுமதியான முத்திரை ஒட்டி அதன்மேல் தனது கையொப்பமிடுவதன் மூலம் முத்திரையை இரத்துச் செய்தல் வேண்டும்.

(இ) விண்ணப்பதாரியின் கையொப்பம் இலங்கை நிர்வாக சேவை/கல்விச்சேவை/அரச கணக்காளர் சேவை/அரச பாடசாலை அதிபர்/ சமாதான நீதவான்/ சட்டத்தரணி அல்லது வருடாந்த சம்பளம் ரூபா 240,360 க்குக் குறையாத அரசாங்க உத்தியோகத்தர் ஆகியவர்களில் ஒருவரினால் அத்தாட்சிப்படுத்தப்படல் வேண்டும்.

(ஈ) முழுமையாகப் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்கள் பதிவுத் தபாலில் "பணிப்பாளர் (நிர்வாகம்) 02, சுகாதார பராமரிப்பு மற்றும் போசணை அமைச்சு, 'சுவசிறிபாய' இல. 385, வண. பத்தேகம விமலவன்ச தேரர் மாவத்தை, கொழும்பு 10" என்ற முகவரிக்கு 2009.11.16 ஆந் திகதிக்கு முன்னர் கிடைக்கும்படி கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "குடும்ப நல சேவை உத்தியோகத்தர் பயிற்சிக்கான மாணவர்களை ஆட்சேர்த்தல் – 2009" என எழுதப்பட வேண்டும்.

7. விண்ணப்பங்கள் கிடைத்தமை பற்றி அறியத்தரப்படமாட்டாது.

8. முடிவுத் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

9. இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விதிகளுக்கமையாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

10. விண்ணப்பதாரர்கள் கல்வி மற்றும் தகைமைகள் உடையவர் எனக் காணும் பட்சத்தில் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவர். விண்ணப்பதாரர் பின்வரும் ஆவணங்களின் மூலப்பிரதிகளை நேர்முகப் பரீட்சையின்போது சமர்ப்பிக்க வேண்டும். சமர்ப்பிக்க முடியாத பட்சத்தில் அவருக்கான நேர்முகப் பரீட்சை இரத்துச் செய்யப்படும் :-

(i) பிறப்புச் சான்றிதழ் ;
(ii) கல்விச் சான்றிதழ் மூலப்பிரதிகள், மூலப்பிரதிகள் இல்லாதவிடத்து வெளிவாரி பரீட்சார்த்தியென்றால் பரீட்சார்த்திகளுக்குக் கொடுக்கப்பட்ட பெறுபேறு படிவங்கள் அல்லது பாடசாலை பரீட்சை அமர்வு என்றால் குறித்த பாடசாலை அதிபர்களினால் கொடுக்கப்பட்ட கடிதத்தின் மூலப்பிரதி ;
(iii) பரீட்சைத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட க. பொ. த. (உ. த.) பரீட்சை புள்ளிகள் அளவு குறிப்பிடப்பட்டிருக்கும் சான்றிதழ் ;
(iv) தேசிய அடையாள அட்டை/கடவுச்சீட்டு/சாரதி அனுமதிப் பத்திரம் ;
(v) விண்ணப்பதாரர் விண்ணப்பிக்கும் மாவட்டத்தில் 2005-2007 காலப்பகுதியின் வதிவை உறுதிப்படுத்த வாக்காளர் பட்டியல் மூலப்பிரதி, கிராமசேவையாளரின் சான்றிதழ் பிரதேச செயலாளரால் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். விண்ணப்பதாரியின் பெயர் வாக்காளர் பட்டியலில் இல்லாதவிடத்து அவரின் பெற்றோரின் பெயர்கள் இடம்பெற்றிருத்தல் வேண்டும்.

*11.* **பயிற்சித் திட்டம்.**- (அ) தெரிவுசெய்யப்பட்ட பரீட்சார்த்திகள் பயிற்சிநெறிக்காக ஒரு குறிப்பிட்ட பாடசாலைக்கு அனுமதிக்கப்படுவர். பயிற்சிக்காலம் : 1 1/2 வருடங்கள் (வெளிக்களப் பயிற்சி ஆறு மாதங்கள்)

(ஆ) பயிற்சியாளர்கள் பயிற்சிப் பாடசாலையின் மற்றும் சுகாதார பராமரிப்பு போஷணை அமைச்சின் சட்ட ஒழுங்கு முறைகளுக்குக் கட்டுப்படுத்தப்படுவர்.

(இ) பயிற்சிக்காலத்தில் இந்தப் பயிற்சியாளர்கள் பரீட்சையில் சித்தியடையாவிட்டால் அல்லது அவரின் செயற்பாடுகள் நடத்தைகளில் அதிருப்தி கண்டால் அல்லது பரீட்சை மற்றும் விடுமுறை நிபந்தனைகளைப் பின்பற்றாவிட்டால் நஷ்டஈடு எதுவும் செலுத்தாமல் எச்சந்தர்ப்பத்திலும் பயிற்சியிலிருந்து நிறுத்த முடியும்.

(ஈ) இப்பயிற்சிக்காலத்தில் கொடுப்பனவாக ரூபா 6,000 வழங்கப்படும்.

(உ) பயிலுநர்கள் பயிற்சிப் பாடசாலைகளுக்கு அனுமதிக்கப்படும் போது பயிலுநரானவர், பயிற்சியை வெற்றிகரமாக பூர்த்தி செய்வதாகவும் பயிற்சியின்போது அதனைவிட்டு விலகமாட்டேன் எனவும், பயிற்சியின் பின் சுகாதார திணைக்கள சேவையில் நியமனம் வழங்கப்படின் ஆகக்குறைந்தது 10 வருடங்கள் சேவையாற்றுவேன் எனவும் சுகாதார சேவை பணிப்பாளர் நாயகத்துடனான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட வேண்டும். பயிற்சி நெறியிலிருந்து விலகுவதாயின் அல்லது தொடர முடியாவிடின் மேற்குறிப்பிட்ட (ஊ) இல் உள்ளவாறு பயிலுநர் திணைக்களத்தினூடாக அரசாங்கம் அவருக்காக வழங்கிய கொடுப்பனவுகளையும் மேற்கொண்ட செலவுகளையும் மீள்செலுத்த வேண்டும். இல்லாவிடின், அவற்றை மீளப் பெறுவதற்கான உரிய நடவடிக்கைகளை திணைக்களம் மேற்கொள்ளும்.

*12.* இறுதிப் பரீட்சையில் சித்திபெறும் பயிலுநர்களுக்கு குடும்ப நல சேவை உத்தியோகத்தர் தரம் III ற்கான நியமனங்கள் மாவட்ட ரீதியில் அவர்களின் பெறுபேறுகளின் அடிப்படையில் வழங்கப்படும்.

*13.* **கல்வி மற்றும் ஏனைய தகைமைகள்.**- விண்ணப்பங்களை நிரப்பும்போது கல்வி மற்றும் ஏனைய தகைமைகளை மிகவும் கவனமாக நிரப்பவும். பயிற்சிகளின்போது அல்லது நியமனங்கள் வழங்கப்பட்ட பின்னரோ சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் போலியானவை எனக் கண்டுபிடிக்கப்படின், பயிற்சியிலிருந்து, சேவையிலிருந்து இடைநிறுத்தப்படவோ அல்லது விலக்குவதற்கும் மற்றும் அரச சேவையில் மீள அனுமதிக்கப்படவோ முடியாதவாறு கறுப்புப் பட்டியலில் பெயரை சேர்க்கவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

*14.* தேர்ந்தெடுக்கப்பட்ட பயிலுநர்கள் இலங்கையின் எப்பகுதியிலும் சேவையினை மேற்கொள்ள தமது உடல் மற்றும் உளத் தகுதியினை நிரூபிப்பதற்கான மருத்துவ பரிசோதனைக்குட்படுத்தப்படுவர். இப்பரிசோதனையில் தகுதியற்றவர் பயிற்சியைத் தொடர்தல் நிராகரிக்கப்படும்.

*15.* இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் விதிகள் மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் கொள்கை அமுலாக்கலுக்கேற்பவும், நிதி ஒழுங்குவிதிகள் மற்றும் காலத்துக்குக் காலம் ஏற்படுத்தும் அரச சட்ட ஒழுங்கு மாற்றங்களுக்கும் கீழ்ப்படிவாக செயற்பட வேண்டும்.

*16.* இவ்வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்படாத பயிற்சி நெறிக்காக சேர்த்துக்கொள்வது தொடர்பாக எழும் எந்தவொரு விடயத்திற்கும் சுகாதார பராமரிப்பு மற்றும் போஷணை அமைச்சின் செயலாளரின் முடிவே இறுதியானதாகும்.

(வைத்திய கலாநிதி) எச். ஏ. கஹந்தலியனகே,
செயலாளர்,
சுகாதார பராமரிப்பு மற்றும் போஷணை அமைச்சு.

சுகாதார பராமரிப்பு மற்றும் போசணை அமைச்சு,
இல. 385, வண. பத்தேகம விமலவன்ச தேரோ மாவத்தை,
கொழும்பு 10,
2009.09.18.

மாதிரி விண்ணப்பப்படிவம் 04-(அ) தொடர் இல. 01

**சுகாதார பராமரிப்பு மற்றும் போசணை அமைச்சில் வடக்கு, கிழக்கு தவிர்ந்த ஏனைய மாகாணங்கள்/கொழும்பு மாநகர சபை என்பவற்றில் "குடும்ப நல சேவை உத்தியோகத்தர் பயிற்சிக்கான மாணவர்கள் ஆட்சேர்ப்பு - 2009"**

*நீர் விண்ணப்பிக்கும் பகுதிக்கு "✓" அடையாளமிடுக.

| | |
|---|---|
| +வடக்குக் கிழக்கு தவிர்ந்த ஏனைய மாகாணங்கள்....... | |
| +கொழும்பு மாநகரசபைக்கு ........ | |

1. (அ) முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :———.
(ஆ) முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :———.
(இ) முழுப்பெயர் (சிங்களம்/தமிழில்) :———.

2. தேசிய அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

3. (i) அஞ்சல் முகவரி :- சிங்களம்/தமிழ் ஆங்கிலம்

......................... ..................
......................... ..................
......................... ..................
......................... ..................

4. (அ) நிரந்தர முகவரி :- சிங்களம்/தமிழ் ஆங்கிலம்

......................... ..................
......................... ..................
......................... ..................
......................... ..................

(ஆ) மாவட்டம்:..................................
(இ) மாவட்டத்தில் நிரந்தர வதிவுடையவரா? (ஆம் / இல்லை) :———.
(ஈ) ஆம் எனில் எவ்வளவு காலம் :———.

5. பிறந்த திகதி :-
வருடம் :———, மாதம் :———, திகதி :———.
16.11.2009 இல் வயது :-
வருடங்கள் :———. மாதங்கள் :———. நாட்கள் :———.

6. உயரம் :-
................. அடி ................... அங்குலம்

7. நீங்கள் இலங்கைப் பிரசையா?

| | |
|---|---|
| ஆம் | |
| இல்லை | |

(பொருத்தமான கூட்டில் "✓" குறியிடுக)

8. விவாகமானவரா/விவாகமாகாதவரா? :———.

9. கல்வித் தகைமை:
(அ) க. பொ. த. (உ/த) பரீட்சை
(தயவு செய்து புள்ளி விபரங்களை இணைக்கவும்)
(விஞ்ஞான பிரிவினருக்கு முன்னுரிமை வழங்கப்படும்)
எந்த மாவட்டத்திலிருந்து பரீட்சைக்கு விண்ணப்பித்தீர்? :———.
வருடம் : ............................. சுட்டெண் : ........................... Z புள்ளி : ....................

| பாடம் | தரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |

(ஆ) க. பொ. த. (சாதாரண தரம்) பரீட்சை : முதலாம் அமர்வு :

வருடம் :...................... சுட்டெண் :....................................

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| 1. | | 6. | |
| 2. | | 7. | |
| 3. | | 8. | |
| 4. | | 9. | |
| 5. | | 10. | |

(இ) க. பொ. த. (சாதாரண தரம்) பரீட்சை - இரண்டாம் அமர்வு :

வருடம் :...................... சுட்டெண் :....................................

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| 1. | | 6. | |
| 2. | | 7. | |
| 3. | | 8. | |
| 4. | | 9. | |
| 5. | | 10. | |

10. ஏதாவது குற்றச்செயலுக்காக நீதிமன்ற தண்டணை அனுபவித்துள்ளீரா? :-
(பொருத்தமான கூட்டில் "✓" குறியிடுக)

| | |
|---|---|
| ஆம் | |
| இல்லை | |

'ஆம்' எனில், தயவு செய்து காரணத்தை குறிப்பிடுக :-
..............................................................................................

11. **விண்ணப்பதாரியின் உறுதியுரை :**
(அ) எனது அறிவிற்கு அமைய என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் அனைத்தும் உண்மையானதும் சரியானதும் என உறுதிமொழிவதுடன் தற்போது முழுநேரப் பாடநெறிகள் எதிலும் ஈடுபடவில்லை எனவும் இத்தால் உறுதிமொழிகின்றேன்.

(ஆ) என்னால் இத்துடன் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் ஏதேனும் பிழையானவை அல்லது போலியானவை எனக் கண்டால் நான் தெரிவுக்கு முன்னராயின் தகுதியற்றவனாவதற்கும், நியமனம் பெற்ற பின்னராயின் நட்டஈடு எதுவுமின்றி விலக்கப்படுவேன் என்பதையும் நான் நன்கறிவேன்.

முத்திரைக் கூடு

....................................................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :——.

12. **கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :**
விண்ணப்பதாரி செல்வி ................................. எனக்கு தனிப்பட்ட முறையில் பரீட்சயமானவர் என்றும் அவரது கையொப்பத்தை எனது முன்னிலையில் ................... 2009 ஆந் திகதி இடப்பட்டது என்பதையும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

....................................................................
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

திகதி :——.

உறுதிப்படுத்துபவரின் விபரம் :-
முழுப் பெயர் :——.
பதவி :——.
முகவரி :——.
(அலுவலக முத்திரையுடன்)

மாதிரி விண்ணப்பப்படிவம் 04-(அ) தொடர் இல. 02

**சுகாதார பராமரிப்பு மற்றும் போசணை அமைச்சில் கிழக்கு மாகாணத்திற்கான "குடும்ப நல சேவை உத்தியோகத்தர் பயிற்சிக்கான மாணவர்கள் ஆட்சேர்ப்பு - 2009"**

1. (அ) முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :———.
(ஆ) முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :———.
(இ) முழுப்பெயர் (சிங்களம்/தமிழில்) :———.

2. தேசிய அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

3. (i) அஞ்சல் முகவரி :- சிங்களம்/தமிழ் ஆங்கிலம்

.......................... ..................
.......................... ..................
.......................... ..................
.......................... ..................

4. (அ) நிரந்தர முகவரி :- சிங்களம்/தமிழ் ஆங்கிலம்

.......................... ..................
.......................... ..................
.......................... ..................
.......................... ..................

(ஆ) மாவட்டம்:..................................
(இ) மாவட்டத்தில் நிரந்தர வதிவுடையவரா? (ஆம் / இல்லை) :———.
(ஈ) ஆம் எனில் எவ்வளவு காலம் :———.

5. பிறந்த திகதி :-
வருடம் :———, மாதம் :———, திகதி :———.
16.11.2009 இல் வயது :-
வருடங்கள் :———. மாதங்கள் :———. நாட்கள் :———.

6. உயரம் :-
................. அடி ................... அங்குலம்

7. நீங்கள் இலங்கைப் பிரசையா?

| | |
|---|---|
| ஆம் | |
| இல்லை | |

(பொருத்தமான கூட்டில் "✓" குறியிடுக)

8. விவாகமானவரா/விவாகமாகாதவரா? :———.

9. கல்வித் தகைமை:

(அ) க. பொ. த. (உ/த) பரீட்சை
(தயவு செய்து புள்ளி விபரங்களை இணைக்கவும்)
(விஞ்ஞான பிரிவினருக்கு முன்னுரிமை வழங்கப்படும்)
எந்த மாவட்டத்திலிருந்து பரீட்சைக்கு விண்ணப்பித்தீர்? :———.
வருடம் : ............................. சுட்டெண் : ........................... Z புள்ளி : ....................

| பாடம் | தரம் |
|---|---|
| 1.<br>2.<br>3.<br>4. | |

(ஆ) க. பொ. த. (சாதாரண தரம்) பரீட்சை : முதலாம் அமர்வு :

வருடம் :..................... சுட்டெண் :.....................................

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| 1. | | 6. | |
| 2. | | 7. | |
| 3. | | 8. | |
| 4. | | 9. | |
| 5. | | 10. | |

(இ) க. பொ. த. (சாதாரண தரம்) பரீட்சை - இரண்டாம் அமர்வு :

வருடம் :...................... சுட்டெண் :.....................................

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| 1.<br>2.<br>3.<br>4.<br>5. | | 6.<br>7.<br>8.<br>9.<br>10. | |

10. ஏதாவது குற்றச்செயலுக்காக நீதிமன்ற தண்டணை அனுபவித்துள்ளீரா? :-

| | |
|---|---|
| ஆம் | |
| இல்லை | |

(பொருத்தமான கூட்டில் "✓" குறியிடுக)

ஆம் எனில், தயவு செய்து காரணத்தை குறிப்பிடுக :-
..........................................................................................

11. **விண்ணப்பதாரியின் உறுதியுரை :**

(அ) எனது அறிவிற்கு அமைய என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் அனைத்தும் உண்மையானதும் சரியானதும் என உறுதிமொழிவதுடன் தற்போது முழுநேரப் பாடநெறிகள் எதிலும் ஈடுபடவில்லை எனவும் இத்தால் உறுதிமொழிகின்றேன்.

(ஆ) வர்த்தமானி அறிவித்தலின் 05 ஆம் பந்தியின் (உ) (ii) இன் பிரகாரம் கிழக்கு மாகாணத்திற்குத் தெரிவு செய்யப்பட்டால் சேவைக்காலம் முழுவதும் கிழக்கு மாகாணத்திலேயே பணிபுரிவதற்கு ஒப்புக்கொள்கிறேன்.

(இ) என்னால் இத்துடன் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் ஏதேனும் பிழையானவை அல்லது போலியானவை எனக் கண்டால் நான் தெரிவுக்கு முன்னராயின் தகுதியற்றவனாவதற்கும், நியமனம் பெற்ற பின்னராயின் நட்டஈடு எதுவுமின்றி விலக்கப்படுவேன் என்பதையும் நான் நன்கறிவேன்.

முத்திரைக் கூடு

....................................................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :———.

12. **கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :**

விண்ணப்பதாரி செல்வி ................................. எனக்கு தனிப்பட்ட முறையில் பரீட்சயமானவர் என்றும் அவரது கையொப்பத்தை எனது முன்னிலையில் .................... 2009 ஆந் திகதி இடப்பட்டது என்பதையும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

....................................................................
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

திகதி :———.

உறுதிப்படுத்துபவரின் விபரம் :-
முழுப் பெயர் :———.
பதவி :———.
முகவரி :———.
(அலுவலக முத்திரையுடன்)

மாதிரி விண்ணப்பப்படிவம் 04-(அ) தொடர் இல. 03

**சுகாதார பராமரிப்பு மற்றும் போசணை அமைச்சில் பெருந்தோட்ட வைத்தியசாலைகளுக்கான "குடும்ப நல சேவை உத்தியோகத்தர் பயிற்சிக்கான மாணவர்கள் ஆட்சேர்ப்பு - 2009"**

1. (அ) முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :———.
   (ஆ) முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :———.
   (இ) முழுப்பெயர் (சிங்களம்/தமிழில்) :———.

2. தேசிய அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

3. அஞ்சல் முகவரி :- சிங்களம்/தமிழ் ஆங்கிலம்

........................... ..................
........................... ..................
........................... ..................
........................... ..................

4. (அ) நிரந்தர முகவரி :- சிங்களம்/தமிழ் ஆங்கிலம்

........................... ..................
........................... ..................
........................... ..................
........................... ..................

(ஆ) மாவட்டம்:..................................
(இ) மாவட்டத்தில் நிரந்தர வதிவுடையவரா? (ஆம் / இல்லை) :———.
(ஈ) ஆம் எனில் எவ்வளவு காலம் :----.

5. பிறந்த திகதி :-
ஆண்டு :----, மாதம் :----, திகதி :----.
16.11.2009 இல் வயது :-
வருடங்கள் :----, மாதங்கள் :----, நாட்கள் :----.

6. உயரம் :-
.................. அடி ................... அங்குலங்கள்

7. நீங்கள் இலங்கைப் பிரசையா?

| | |
|---|---|
| ஆம் | |
| இல்லை | |

(பொருத்தமான கூட்டில் "✓" குறியிடுக)

8. விவாகமானவரா/விவாகமாகாதவரா? :----.

9. கல்வித் தகைமை:

(அ) க. பொ. த. (உ/த) பரீட்சை
(தயவு செய்து புள்ளி விபரங்களை இணைக்கவும்)
(விஞ்ஞான பிரிவினருக்கு முன்னுரிமை வழங்கப்படும்) :----.
எந்த மாவட்டத்திலிருந்து பரீட்சைக்கு விண்ணப்பித்தீர்? :----.
வருடம் : ............................. சுட்டெண் : ........................... Z புள்ளி : .....................

| பாடம் | தரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |

(ஆ) க. பொ. த. (சாதாரண தரம்) பரீட்சை : முதலாம் அமர்வு :

வருடம் :...................... சுட்டெண் :.....................................

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| 1. | | 6. | |
| 2. | | 7. | |
| 3. | | 8. | |
| 4. | | 9. | |
| 5. | | 10. | |

(இ) க. பொ. த. (சாதாரண தரம்) பரீட்சை – இரண்டாம் அமர்வு :

வருடம் :..................... சுட்டெண் :....................................

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| 1.<br>2.<br>3.<br>4.<br>5. | | 6.<br>7.<br>8.<br>9.<br>10. | |

10. ஏதாவது குற்றச்செயலுக்காக நீதிமன்ற தண்டணை அனுபவித் துள்ளீரா? :-

| | |
|---|---|
| ஆம் | |
| இல்லை | |

(பொருத்தமான கூட்டில் "✓" குறியிடுக)

ஆம் எனில் தயவு செய்து காரணத்தை குறிப்பிடுக :-
..................................................................................................

11. **விண்ணப்பதாரரின் உறுதியுரை :**

(அ) எனது அறிவிற்கு அமைய என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் அனைத்தும் உண்மையானதும் சரியானதும் என உறுதிமொழிவதுடன் தற்போது முழுநேரப் பாடநெறிகள் எதிலும் ஈடுபடவில்லை எனவும் இத்தால் உறுதிமொழிகின்றேன்.

(ஆ) வர்த்தமானி அறிவித்தலின் 05 ஆம் பந்தியின் (உ) (111) இன் பிரகாரம் பெருந்தோட்ட வைத்தியசாலைகளுக்கு தெரிவு செய்யப்பட்டால் சேவைக்காலம் முழுவதும் பெருந்தோட்டப் பகுதியில் பணிபுரிவதற்கு ஒப்புக்கொள்கிறேன்.

(இ) என்னால் இத்துடன் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் ஏதேனும் பிழையானவை அல்லது போலியானவை எனக் கண்டால் நான் தெரிவுக்கு முன்னராயின் தகுதியற்றவறென்றும், நியமனம் பெற்ற பின்னராயின் நட்டஈடு எதுவுமின்றி விலக்கப்படுவேன் என்பதையும் நான் நன்கறிவேன்.

முத்திரைக் கூடு

....................................................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

12. **உறுதிப்படுத்தல் :**

விண்ணப்பதாரி செல்வி ................................. எனக்கு தனிப்பட்ட முறையில் பரீட்சயமானவர் என்றும் அவரது கையொப்பத்தை எனது முன்னிலையில் ................... 2009 ஆந் திகதி இடப்பட்டது என்பதையும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

....................................................................
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

திகதி :----.

உறுதிப்படுத்துபவரின் விபரம் :-
முழுப் பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
(அலுவலக முத்திரையுடன்)

10-265

**திட்ட செயற்படுத்துகை அமைச்சின் கீழ் சேர்த்துக்கொள்ளப்பட்ட கருத்திட்ட அலுவலர்களுக்கும் மற்றும் அபிவிருத்தி அலுவலர்களுக்குமான இரண்டாம் வினைத்திறன்காண் தடைப்பரீட்சை – 2009**

திட்ட செயற்படுத்துகை அமைச்சின் கீழ் சேர்த்துக்கொள்ளப்பட்ட அபிவிருத்தி அலுவலர்களுக்கும் மற்றும் கருத்திட்ட அலுவலர்களுக்குமான இரண்டாம் வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை 2010 ஆம் ஆண்டு தை மாதம் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் கொழும்பில் நடத்தப்படுமெனவும் இதற்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப் படும் கடைசித் திகதி 2009, கார்த்திகை 9 ஆந் திகதி எனவும் அபிவிருத்தி அலுவலர்கள் தங்களின் பன்னிரெண்டாவது வருடாந்த சம்பள அளவுத்திட்டத்தையும், கருத்திட்ட அலுவலர்கள் தங்களின் ஏழாவது வருடாந்த சம்பள அளவுத்திட்டத்தையும் அடைவதற்கு முன் இப்பரீட்சையில் சித்தியடைய வேண்டுமெனவும் இத்தால் அறிவிக்கப் படுகின்றது.

2. **பரீட்சைத்திட்டம்**.- கீழே தரப்பட்டுள்ள பாடங்களை உள்ளடக்கிய விதத்தில் வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை அமைந்திருக்கும் :-

(1) பாடம் இல. 1 - பொருளாதார அபிவிருத்தி/ திட்டமிடல் (3 மணித்தியாலங்கள்) -100 புள்ளிகள்
(2) பாடம் இல. 2 - சமூக விஞ்ஞானம்/பிராந்திய அபிவிருத்தி (2 மணித்தியாலங்கள்) - 100 புள்ளிகள்

**குறிப்பு**-

(அ) ஓர் உத்தியோகத்தர் தமது விருப்பப்படி ஒரே தடவையில் அல்லது பல தடவைகளில் சகல பாடங்களுக்கும் தோற்ற முடியும்.

(ஆ) ஒரு பரீட்சார்த்தி சித்தியடைவதற்கு ஒவ்வொரு வினாத்தாளிலும் 40% புள்ளிகளையோ அல்லது அதற்கு கூடுதலாகவோ பெற்றிருக்க வேண்டும்.

(இ) இந்தப் பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும்.

(ஈ) சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட விதிகளையும் ஒழுங்குகளையும் பின்பற்றுமாறு கேட்டுக்கொள்ளப் படுகின்றனர். தவறும் பட்சத்தில் தண்டனை எதிர்கொள்ளப்படுகின்றனர்.

3. **பாடங்கள்**.- (அ) பொருளாதார அபிவிருத்தி/ திட்டமிடல் (3 மணித்தியாலங்கள்)

(1) இலங்கையின் பொருளாதார நிலைமை, கொள்கைகளும் பிரச்சினைகளும்
(2) கருத்திட்ட திட்டமிடல், செயற்படுத்துகை மற்றும் மதிப்பீடு
(3) தகவல் சேகரிப்பு, கோவையிடல் மற்றும் பகுப்பாய்வு.

(ஆ) சமூக விஞ்ஞானம்/பிராந்திய அபிவிருத்தி (2 மணித்தியாலங்கள்)
(1) கிராமிய சமூக விஞ்ஞானம்
(2) இலங்கையின் கிராமிய சமுதாயம்
(3) இலங்கையின் நகர மயமாக்கல்
(4) பிராந்திய அபிவிருத்தி

4. **தகைமைகள்**.- இந்தப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு திட்டச் செயற்படுத்துகை அமைச்சின் கீழ் சேர்த்துக்கொள்ளப்பட்ட சகல அபிவிருத்தி அலுவலர்களும் மற்றும் கருத்திட்ட அலுவலர்களும் தகுதியுடையவராவார்கள்.

5. **விண்ணப்ப முறை**.- (அ) இவ்வறிவித்தலின் இறுதியில் இணைக்கப்பட்ட மாதிரிப்படிவத்தின் பிரகாரம், ஒரு A4 அளவுத் தாளில் இரு பக்கத்தையும் பயன்படுத்தி விண்ணப்பப்படிவம் தயாரிக்கப்படுதல் வேண்டும். இலக்கம் 1 இல் இருந்து 7 வரையிலான விபரங்கள் முதல் பக்கத்திலும், 8 இல் இருந்து மிகுதி விபரங்கள் இரண்டாவது பக்கத்திலும் வரும் வகையில் தயாரிக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பங்கள் பரீட்சார்த்தியின் சொந்தக் கையெழுத்தினால் நிரப்பப்படுதல் வேண்டும். விசேட விண்ணப்பப்படிவத்தின் பிரகாரம் அமையாத விண்ணப்பங் களும் மற்றும் முறையாக பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்களும் எவ்வித அறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும். மாதிரி விண்ணப்பப்படிவத்தின் பிரகாரம் விண்ணப்பங்கள் அனுப்பப்பட வேண்டும். அன்றேல் அவை நிராகரிக்கப்படும். (விண்ணப்பத்தின் பிரதி ஒன்றினை தன்னுடன் வைத்துக்கொள்வது பயனுள்ளதாக இருக்கும்.)

(ஆ) விண்ணப்பங்கள் திணைக்களத் தலைவர்களுக்கூடாக "பரீட்சை ஆணையாளர் நாயகம், தேசிய மதிப்பீடும் சேவையும் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், த. பெ. இல. 7, பெலவத்தை, பத்தரமுல்ல" என்ற முகவரிக்குப் பதிவுத்தபாலில் 2009, கார்த்திகை 9 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன் கிடைக்கக்கூடியதாகவோ அனுப்பப்படல் வேண்டும். பரீட்சை ஆணையாளருக்கு முகவரியிடப்பட்டு விண்ணப்பம் அனுப்பும் காகித உறையின் இடது பக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும்.

(இ) பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்றுகின்ற மொழியிலேயே விண்ணப்பங்கள் தயாரிக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்தை தயாரிக்குமிடத்து விண்ணப்பப்படிவத்தின் தலைப்பு மற்றும் பரீட்சையின் பெயர் ஆகியவை சிங்களம் மற்றும் தமிழ் விண்ணப்பங் களில், ஆங்கிலத்திலேயே குறிப்பிடப்படல் வேண்டும்.

(ஈ) பொருத்தமான வடிவமைப்புக்கு அப்பாற்பட்டதும், எல்லா தகவல்களையும் கொண்டிராததும், பிந்தி வந்தடைகின்ற விண்ணப்பங்கள் எதுவித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் அஞ்சலில் தொலைந்ததாகவோ, தாமதித்ததாகவோ செய்யப்படும் முறைப்பாடுகள் கவனத்தில் எடுக்கப்பட மாட்டா.

6. பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட பரீட்சார்த்திகள் யாவருக்கும் நேரசூசிகளுடன் அனுமதி அட்டைகள் வழங்கப்படும். பரீட்சைத் தேதிக்குக் குறைந்தது 4 நாட்களுக்கு முன்னரேனும் ஒரு பரீட்சார்த்தி தமது அனுமதி அட்டையைப் பெறாவிடின், அவர் "பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை, இலங்கை பரீட்சைத் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை" (தந்தி : பரீட்சைகள் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை) என்ற முகவரிக்கு உடன் காலதாமதமின்றி தொடர்பு கொள்ளுதல் வேண்டும். அவ்வாறு தொடர்பு கொள்ளும் போது பின்வரும் தகவல்களையும் அறிவித்தல் வேண்டும். இந்தப் பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் நடாத்தப்படுகின்றது. சகல பரீட்சார்த்திகளும் அவரினால் வழங்கப்பட்ட விதிகளையும் ஒழுங்குகளையும் பின்பற்றுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

பரீட்சைக்கு அனுமதி அட்டை வழங்கப்படுவதானது அவர் பரீட்சைக்குத் தோற்ற தகைமை கொண்டவர் என்று ஏற்றுகொள்ளப்பட்டதாகக் கருதப்படமாட்டாது :

7. **ஆளடையாள அட்டை**.- பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தில் (ஒவ்வொரு பாடத்தின் போதும்) மேற்பார்வையாளர் திருப்திப்படும் வகையில் தங்கள் ஆளடையாளத்தை நிரூபிக்குமாறு வேண்டப்படுவர். இதற்காகப் பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்று ஏற்றுக் கொள்ளப்படும் :-

(அ) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட ஆளடையாள அட்டை

(ஆ) செல்லுபடியான ஒரு கடவுச்சீட்டு

மேலே குறிப்பிட்ட ஆவணங்களில் ஏதாவது ஒன்றினை சமர்ப்பிக்காத பரீட்சார்த்திகள் எவரையும் நிராகரிக்கும் உரிமை பரீட்சை ஆணையாளர் நாயகத்துக்கு உண்டு.

8. **பரீட்சைக் கட்டணம்**.- பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தியிட மிருந்து பின்வரும் பரீட்சைக் கட்டணங்கள் அறவிடுவதென்று தீர்மானிக்கப்பட்டுள்ளது :-

| | பரீட்சைக் கட்டணம் | ரூபா சதம் |
|---|---|---|
| (அ) | முதற் தடவை தோற்றுவதற்கு | இலவசம் |
| (ஆ) | முதற் தடவையின் பின்னர் ஒவ்வோர் அமர்வுக்கும் முழுப் பரீட்சைக்கும் | 200 0 |
| (இ) | ஒரு பாடத்திற்கு | 100 0 |

* பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் 2003-20-13 வருமான தலைப்பிற்கு வைப்புச் செய்து இலங்கையிலுள்ள எந்தவொரு மாவட்ட/ பிரதேச செயலாளர் அலுவலகத்திலும் பெற்றுக்கொண்ட பற்றுச் சீட்டினை விண்ணபத்தில் நன்றாக ஒட்டி விடுதல் வேண்டும். பற்றுச் சீட்டின் போட்டோ கொப்பி பிரதி ஒன்றினை தம்முடன் வைத்துக் கொள்வது பயனுள்ளதாக இருக்கும்.

9. இப்பரீட்சைக்குத் தோற்றத் தகுதி பெற்றவர்கள் மற்றும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அனுமதி அட்டைகள் வழங்கப்பட்ட திணைக்கள/ நிறுவனத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கும் பரீட்சைக்குச் சமுகமளிப்பதற்குக் கடமை விடுதலை வழங்குமாறு திணைக்கள/ நிறுவனத் தலைவர்கள் வேண்டப்படுகின்றார்கள்.

10. இவ்வொழுங்கு விதிகளில் ஏற்பாடு செய்யப்படாத எவ்விடயமும் இந்த அமைச்சின் தற்றுணிபின்படி முடிவு செய்யப்படும்.

தாரா விஜேதிலக,
செயலாளர்,
திட்ட அமுலாக்கல் அமைச்சு.

திட்ட அமுலாக்கல் அமைச்சு,
கொழும்பு 01.

மாதிரி விண்ணப்பப்படிவம்

[ ]

(அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்)

**திட்ட செயற்படுத்துகை அமைச்சின் கீழ் சேர்த்துக்கொள்ளப்பட்ட கருத்திட்ட அலுவலர்களுக்கும் மற்றும் அபிவிருத்தி அலுவலர்களுக்குமான இரண்டாம் வினைத்திறன்காண் தடைப்பரீட்சை – 2009**

SECOND EFFICIENCY BAR EXAMINATION FOR DEVELOPMENT OFFICERS AND PROJECT OFFICERS RECRUITED UNDER THE MINISTRY OF PLAN IMPLEMENTATION - 2009

(**குறிப்பு**- இப்படிவம் பரீட்சார்த்தியின் சொந்தக் கையெழுத்தில் சரியாகவும், தெளிவாகவும் நிரப்பப்படல் வேண்டும்.)

பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் மொழிமூலம் :
சிங்களம் - 2
தமிழ் - 3 [ ]
ஆங்கிலம் - 4

(உரிய இலக்கத்தினை கூட்டில் இடுக)

1. (i) சொந்தப் பெயர் முதலெழுத்துக்களுடன் :- (பெரிய ஆங்கில எழுத்தில்) :----.
உ - ம் : SILVA, B.A.
(ii) சொந்தப் பெயர் முதலெழுத்துக்களுடன் (சிங்களத்தில்/ தமிழில்) :----.
(iii) முதலெழுத்துக்கள் குறிப்பிடும் பெயர்கள் (சிங்களத்தில்/ தமிழில்) :----.
(iv) முதலெழுத்துக்கள் குறிப்பிடும் பெயர்கள் (பெரிய ஆங்கில எழுத்தில்) :----.

2. (i) அலுவலக முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :----.
(ii) அலுவலக முகவரி (பெரிய ஆங்கில எழுத்தில்) :----.
(இந்த விலாசத்திற்கு அனுமதி அட்டைகள் அனுப்பப்படும்)

3. பிறந்த திகதி :-
ஆண்டு [ | | | ] மாதம் [ | ] திகதி [ | ]

4. கருத்திட்ட/அபிவிருத்தி அலுவலராக கடமையேற்ற திகதி : (கடமையைப் பொறுப்பேற்றுக்கொண்ட சரியான திகதியைக் குறிப்பிடுக)
வருடம் [ | | | ] மாதம் [ | ] திகதி [ | ]

5. வர்த்தமானி அறிவித்தலின் 2 ஆம் பந்தியின் கீழ் விண்ணப் பிக்கும் பாடங்கள் :-

| பாடம் | பாட இலக்கம் |
|---|---|
| (i) .............................................. | [ ] |
| (ii) .............................................. | [ ] |

6. நீங்கள் முதல் தடவையாக இந்தப் பரீட்சைக்குத் தோற்று கின்றீர்களா? : ————.

7. முதல் தடவையாக இல்லாவிட்டால், செலுத்தப்படும் பரீட்சைக் கட்டணம் : ————.

பரீட்சை ஆணயைாளருக்கு 4000-20-03-20-13 வருமான தலைப்பில் வைப்புச் செய்து இலங்கையிலுள்ள எந்தவொரு பிரதேச செயலகத்திலும் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை இங்கு நன்கு ஒட்டிவிடுதல் வேண்டும். (பற்றுச்சீட்டின் பிரதியை தன்னுடன் வைத்துக் கொள்வது பயனுள்ளதாக இருக்கும்.)

8. நான் அளித்துள்ள விபரங்கள் சரியானவை என்றும், மேற்குறிப்பிட்ட 5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட மொழிமூலம் இப்பரீட்சைக்குத் தோற்ற உரித்துடையேன் என்றும், அத்துடன் இத்தால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படுகின்ற பரீட்சை தொடர்பான நியதிகள், ஒழுங்குகள், பிரமாணங்களை பின்பற்றுவதாக யான் உறுதி செய்கிறேன்.

————,
பரீட்சார்த்தியின் கையொப்பம்.

திகதி :————.

**குறிப்பு**.- பரீட்சார்த்தி தனது திணைக்களத் தலைவர் அல்லது அத்தகைய திணைக்களத் தலைவர் சார்பாக கையொப்பமிட அதிகாரமளிக்கப்பட்ட ஓர் உத்தியோகத்தர் அல்லது தனது உள்ளூர் தலைவர் முன்னிலையில் கையொப்பமிட வேண்டும்.

**9. கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தல் :**

திரு./ திருமதி/ செல்வி ...................................... எனது அலுவலகத்தில் ஓர் உத்தியோகத்தர் என்றும், அவரை எனக்கு நன்கு தெரியும் என்றும், அவர் 20........ ஆம் ஆண்டு ................... மாதம் ........................ ஆந் திகதியன்று என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்றும் நான் இத்தால் உறுதிபடுத்துகின்றேன்.

————,
கையொப்பத்தை உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

பெயர் :————.
பதவிப் பெயர் :————.
முகவரி :————.

**10. திணைக்களத் தலைவரின் சான்றிதழ் :-**

நான்,
(i) மேலே கொடுக்கப்பட்ட விபரங்கள் செவ்வை பார்க்கப்பட்டுச் சரியாக இருக்கக் காணப்பட்டன என்றும்,

(ii) பரீட்சார்த்தி இப்பரீட்சைக்குத் தோற்றத் தகைமையுடையவர் என்றும் சான்றுபடுத்துகின்றேன்.

————,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்
(பதவி முத்திரை பதிக்கப்படல் வேண்டும்)

பெயர் :————.
பதவிப் பெயர் :————.
முகவரி :————.

10-268

---

## கால்நடைவள அபிவிருத்தி அமைச்சு

கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம்

### இலங்கை கால்நடை வள அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் II ஆம் வகுப்பு 'ஆ' தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்தல் - 2009

கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் இலங்கை கால்நடை வள அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் II ஆம் வகுப்பு "ஆ" தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான போட்டிப் பரீட்சையின் பொருட்டு கால்நடை உற்பத்தி, சுகாதார பணிப்பாளர் நாயகத்தினால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. **பரீட்சை**.- இப்பரீட்சை 2009, நவெம்பர் மாதம் கால்நடை உற்பத்தி சுகாதார பணிப்பாளர் நாயகத்தினால் கண்டியில் நடாத்தப்படும். இப்பரீட்சையினை ஒத்திப்போடுவதற்கும் அல்லது இரத்துச் செய்வதற்கும் கால்நடை உற்பத்தி, சுகாதார பணிப்பாளர் நாயகத்திற்கு அதிகாரம் உண்டு.

3. **சேவை நிபந்தனைகள்**.- அரசாங்க சேவையில் நியமனங்களைக் கட்டுப்படுத்தும் பொது நிபந்தனைகளுக்கும் இங்கு கீழ் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கும் அமைவாக கால்நடை வள அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் II ஆம் வகுப்பு "ஆ" தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படும் :-

(i) தீவின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்கு உட்படுத்தப் படுவர் என்ற நிபந்தனையின் பேரிலேயே உத்தியோகத்தர் நியமிக்கப்படுவார்.

(ii) ஆட்சேர்ப்பு செய்யப்படும் உத்தியோகத்தர்கள் மூன்று வருட தகுதிகூர் காலத்திற்கு உட்படுதல் வேண்டும். அரசாங்க சேவைப்பதவி ஒன்றில் உறுதிப்படுத்தப்பட்ட உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்படுவாரேயாயின் அது தொடர்பில் நியமனமானது ஒரு வருட பரீட்சார்த்த காலப்பகுதிக்கு உட்பட்டதாக அமையும். ஆட்சேர்ப்பு செய்யப்படும் உத்தியோகத்தர்கள் அத்தகைய பதவியில் உறுதிப்படுத்து வதற்கு முன்னர் விதித்துரைத்த முதலாவது வினைத்திறன் தடைப்பரீட்சையில் சித்தி எய்துதல் வேண்டும்.

(iii) ஆங்கில மொழி மூலத்தில் சேவைக்கு ஈர்ப்புச் செய்யப்படும் உத்தியோகத்தர்கள் பதவியில் நிரந்தரமாக்கப்படுகையில் ஏனைய விடயங்களுக்கும் மேலாக தகுதிகூர் காலத்திற்குள் அரச கரும மொழியில் சிங்களம் அல்லது தமிழ் மொழியில் இயலுமையை பெற்றுக்கொள்ள வேண்டும். அரச மொழிக் கொள்கையில் இருந்து விடுவிப்புச் செய்வதாயின் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சிங்களம்/ தமிழ் பாடத்தில் சித்தியடைந் துள்ளதாக இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் வெளியிடப்படும் பெறுபேற்றுச் சான்றிதழின் சான்றுப் படுத்தப்பட்ட பிரதி அல்லது பெறுபேற்றுச் சான்றிதழின் மூலப் பிரதியினை சமர்ப்பித்தல் வேண்டும்.

(iv) நியமனம் பெறும் உத்தியோகத்தர்கள் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பணிப்புரையிற்கும் தாபன விதிக்கோவை யின் ஒழுங்குவிதிகளுக்கும் நிதிப்பிரமாணத்திற்கும் அரசாங்கத்தால் அவ்வப்போது பிறப்பிக்கப்படுகின்ற பிரமாணங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் அமைச்சு மற்றும் திணைக்களம் என்பவற்றின் பணிப்புரைகளுக்கும் கட்டுப்படுதல் வேண்டும்.

4. **சம்பளத்திட்டம்**.- (MT-2-2006 A) – ரூபா 14,570 – 10 x 170 – 11 x 180 – 6 x 240 – 14 x 320 – ரூபா 24,170. (பொ. நி. சு. 6/2006 (IV) இற்கு அமைய மாதாந்தம்) இச்சம்பளத் திட்டத்தில் ரூபா 14,570 - 10×170 - ரூபா 16,270 சம்பளப் படிமுறையும் இத்தரத்திற்கு உரியதாகும்.

5. **வயதெல்லை**.- (i) விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி அன்று வயது 21 இற்குக் குறையாமலும் 35 இனை விஞ்சி விடாமலும் இருத்தல் வேண்டும். (உச்ச வயதெல்லை ஏலவே அரசாங்க சேவையில் உள்ளவர்களுக்கு ஏற்புடையதாகாது).

(ii) விண்ணப்பகாரர் அனைவரும் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(iii) தேகாரோக்கியமுடையவர்களாக இருத்தல் வேண்டும்.

6. **கல்வித் தகைமைகள்**.- 2009.10.12 ஆந் திகதியன்று கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும். க. பொ. த. (உ/த) பரீட்சையில் தூயகணிதம், பிரயோக கணிதம், பௌதீக விஞ்ஞானம், இரசாயன விஞ்ஞானம், புள்ளிவிபரவியல், உயிரியல் விஞ்ஞானம், விவசாயம் போன்ற பாடங்களில் இரண்டு பாடங்கள்

உள்ளடக்கப்பட்டு மொத்தமாக மூன்று பாடங்களில் சித்தியடைந்து இருத்தல் வேண்டும்.

அத்துடன்

வெலிசர, அநுராதபுரம், குண்டசாலை போன்ற இலங்கை கால்நடை வளர்ப்பு பாடசாலை ஒன்றில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட இருவருட டிப்ளோமா சான்றிதழைக் கொண்டிருத்தல் வேண்டும்.

குறிப்பு : விண்ணப்பம் பெற்றுக்கொள்ளப்படுகின்ற முடிவுத் திகதி அன்றோ அல்லது அதற்கு முன்னரோ தகைமையைக் கொண்டிருத்தல் வேண்டும். பெறுபேற்றினை எதிர்பார்த்து சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

7. **ஆட்சேர்ப்பு முறைமை.**- ஆரம்பத் தகைமைகளைப் பெற்றிருக்கும் விண்ணப்பக்காரர் கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தினூடாக நடாத்தப்படுகின்ற பொதுப் போட்டிப் பரீட்சையில் அமர்தல் வேண்டும்.

(i) பொதுப் போட்டிப் பரீட்சைக்குரிய அனைத்து வினாப்பத்திரத்திலும் 50% புள்ளிகளை அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றுக்கொள்கின்ற விண்ணப்பக்காரர் நேர்முகப் பரீட்சைக்கு திறமை அடிப்படையில் அழைக்கப்படுவர். நேர்முகப் பரீட்சைக்காக எவ்வித புள்ளிகளும் வழங்கப்படமாட்டாது. தகைமைகளை உறுதி செய்து கொண்டு விண்ணப்பகாரர் பரீட்சையின்போது பெற்றுக்கொள்ளப்பட்ட மொத்தப் புள்ளிகளின் அடிப்படையில் திறமை ஒழுங்கில் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும்.

**பரீட்சை :**

(i) இப்பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலங்களில் நடாத்தப்படும்.

(ii) விண்ணப்பக்காரர் தான் விரும்பும் மொழி மூலத்தில் பரீட்சைக்குத் தோற்றலாம்.

(iii) பரீட்சையின்போது மொழி மூலத்தினை எக்காரணம் கொண்டும் மாற்றம் செய்வதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

(iv) பரீட்சைக் கட்டணம் ரூபா 300.- கால்நடை உற்பத்தி, சுகாதார பணிப்பாளர் நாயகத்தின் பெயரிற்கு வழங்கப்படுகின்ற பேராதனையில் அமைந்துள்ள தபால் கந்தோரில் மாற்றத்தக்கவாறு பெற்றுக்கொள்ளப்பட்ட காசுக்கட்டளையினை உரிய இடத்தில் ஒட்டி அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

(v) பரீட்சைப் பாடங்கள்.- பரீட்சை இரண்டு வினாத்தாள்களைக் கொண்டது.

(அ) விவேகம்

(ஆ) தொழில்நுட்பவியல்

(vi) பாடத்திட்டம் :

(அ) விவேகப் பரீட்சை (நேரம் : 1 மணித்தியாலம்) - மொத்தப் புள்ளிகள் 100.
இதில் விண்ணப்பக்காரர் தர்க்கரீதியாக சிந்திக்கும் ஆற்றல் அவரது சிந்தனையின் பகுப்பாய்வு அம்சங்கள், தீர்மானம் எடுக்கும் திறன், சீர்தூக்கிப் பார்க்கும் வல்லமை என்பன அடங்கலான வினாக்கள் உள்ளடக்கப்பட்டிருக்கும்.

(ஆ) தொழில்நுட்பவியல் (நேரம் : 1 மணித்தியாலம்) - மொத்தப் புள்ளிகள் 100.
இவ்வினாப்பத்திரத்தில் பின்வரும் விடயங்கள் உள்ளடக்கப்பட்டிக்கும் -

(i) இலங்கையில் விவசாயமற்றும் கால்நடை துறைக்கு கிடைக்கப்பெறும் வளங்கள் அதன் சிறப்பம்சங்கள் தற்போதைய நிலைமை மற்றும் பொருளாதார நடவடிக்கை.

(ii) இலங்கையில் கால்நடை உற்பத்தி துறையில் உற்பத்தி அளவு மற்றும் சந்தைப்படுத்தல் முறைமை கால்நடை வளர்ப்பின் பங்கு, அவற்றின் இடஅமைவு மற்றும் பரம்பல்.

(iii) பண்ணை விலங்குகளின் இனப்பெருக்கத்தின் பொருட்டு பயன்படுத்தப்படும் முறைமைகள்.

(iv) தொற்றும் விலங்கு நோய்கள், விலங்கு நோய்களின் கட்டுப்பாடு, நோயுற்ற விலங்குகளினை எச்சங்களை சேகரித்தல் மற்றும் கொண்டு செல்லுதல்.

(v) ஒன்றிணைந்த பண்ணை முறைமையின் மீள் பயன்பாட்டு முறைமைகள்.

(vi) கால்நடை வளர்ப்பு மற்றும் அது சார்ந்த கைத்தொழில் பால் தயாரிப்பு, இறைச்சி தயாரிப்பு, கால்நடை உணவு உற்பத்தி.

(vii) கால்நடை வளர்ப்பு செயன்முறையுடன் தொடர்புற்ற வருமான செலவினங்களைக் கணிக்கும் ஒழுங்கு முறை. கணக்குப் பகுப்பாய்வு விலங்குப் பண்ணைத் திட்டம்.

(viii) விஞ்ஞான தகவல்களை பரப்புதல் அவற்றின் ஆக்கத்திறன் தொடர்புற்ற முறைமைகளின் பிரயோகம்.

9. **விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படும் முறை.**- (i) இவ்வறிவித்தலுக்கு அமைவாக இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய 8 1/2" x 12" அளவிலான A4 கடதாசியில் இரு பக்கங்களினையும் பிரயோகித்து தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் 2009.10.23 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கத்தக்கவாறு ''பணிப்பாளர் நாயகம், கால்நடை உற்பத்தி, சுகாதாரத் திணைக்களம், த. பெ. இலக்கம் 13, கெடம்பே, பேராதனை'' எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பத்தை உள்ளிட்டு அனுப்பும் கடிதவுறையின் இடதுபக்க மேல் மூலையில் ''கால்நடை வள அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சை'' எனும் வாசகம் தெளிவாக எழுதப்படுதல் வேண்டும். விண்ணப்ப முடிவுத் திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

குறிப்பு.- அரசாங்க சேவையில் உள்ள விண்ணப்பக்காரர் தமது விண்ணப்பங்களைத் திணைக்களத் தலைவரினூடாக சமர்ப்பித்தல் வேண்டும்.

(ii) சகல தேவைப்பாடுகளையும் பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். தபாலிலிடுகையின்போது விண்ணப்பங்கள் காணாமல் போதல் அல்லது தாமதமாகி விடுதல் போன்ற எவ்வித முறைப்பாடுகளும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

(iii) விண்ணப்பங்கள் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது. விண்ணப்பக்காரருக்கு பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் பரீட்சை ஆரம்பிப்பதற்கு நான்கு நாட்களுக்கு முன்னர் கிடைக்கப்பெறாதவிடத்து பின்வரும் விபரங்களுடன் உடனடியாக கால்நடை உற்பத்தி சுகாதார சேவைப் பணிப்பாளர் நாயகத்துடன் தொடர்பு கொள்க :-

(அ) விண்ணப்பகாரரது முழுப்பெயர்

(ஆ) முகவரி

(இ) விண்ணப்பம் தபாலிலிட்ட திகதி, பதிவு இலக்கம், தபாற் பணிமனை.

10. விண்ணப்பக்காரர் பின்வரும் ஆவணங்களில் ஒளிப்படப் பிரதியினை (photo copy) விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும் :-

(அ) பிறப்பு அத்தாட்சிப்பத்திரம்

(ஆ) கல்வித் தகைமைகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள்.

**விண்ணப்பக்காரரது ஆளடையாளம்.**- பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பக்காரர் யாவரும் பரீட்சை நிலையத்தில் தமது ஆளடையாளத்தினை பரீட்சை நிலைய பொறுப்பதிகாரி திருப்தியுறும் வகையில் உறுதிப்படுத்துதல் வேண்டும். அதன்பொருட்டு பின்வருவன ஏற்றுக்கொள்ளப்படும் :-

(அ) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை

(ஆ) ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய கடவுச்சீட்டு

**பிழையான தகவல்களை வழங்குதல்.**- இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு விண்ணப்பக்காரர் உரிய தகைமைகளைக் கொண்டிராமை கண்டுபிடிக்கப்பட்டால் பரீட்சைக்கு முன்னர், பரீட்சையின்போது அல்லது பரீட்சையின் பின்னர் எச்சந்தர்ப்பத்திலாயினும் அவருடைய விண்ணப்ப தகைமையினை இரத்துச் செய்யப்பட இடமுண்டு. விண்ணப்பகாரர் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்கள் ஏதாவது பிழையானது என தெரிந்திருந்தும் சமர்ப்பித்து இருப்பாராயின் அவர் சேவையினின்றும் நிறுத்தப்படுவதற்கு இடமுண்டு.

இவ்வர்த்தமானி பத்திரிகையில் பகுதி I : தொகுதி (II அ) வின் ஆரம்பத்தில் காட்டப்பட்டுள்ள அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடையதாகும் பொது நிபந்தனை மற்றும் பரீட்சார்த்திகளுக்கான விதிகள், அறிவுறுத்தல்கள் பால் உங்கள் கவனத்தை ஈர்ப்பதுடன் அவற்றினை பின்பற்றவும்.

11. இவ்வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்படாத ஏதாவது விடயம் தொடர்பில் பிரச்சினைகள் ஏற்படுமாயின் அது தொடர்பிலும் பரீட்சையின் ஊடாக ஆட்சேர்ப்பு செய்யப்படும் எண்ணிக்கை போன்றவற்றில் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் கால்நடை உற்பத்தி சுகாதார சேவை பணிப்பாளர் நாயகத்திற்கே உரியதாகும். அதுவே இறுதித் தீர்வாகும். (கால்நடை வள அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவை தொடர்பிலான முழுமையான விபரம் 2005.09.14 ஆந் திகதி வெளியிடப்பட்ட 1403/23 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அதிவிசேட வர்த்தமானியில், இலங்கை கால்நடை வள அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவை பிரமாணத்தில் தரப்பட்டுள்ளன.)

எச். எம். எஸ். பி. ஹேரத்,
கால்நடை உற்பத்தி, சுகாதார
சேவைப் பணிப்பாளர் நாயகம்.

கால்நடை உற்பத்தி, சுகாதார சேவைத் திணைக்களம்,
பேராதனை,
2009.09.10.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**கால்நடைவள அபிவிருத்தி அமைச்சு**

***கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம்***

*இலங்கை கால்நடை அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் II ஆம் வகுப்பு "ஆ" தரத்திற்கு கால்நடைவள அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிக்கான விண்ணப்பம்*

அலுவலக உபயோகத்திற்கு

| பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் | |
|---|---|

(உரிய இலக்கத்தை அடைப்பில் எழுதுக)
சிங்களம் - 02
தமிழ் - 03
ஆங்கிலம் - 04

1. பெயர் :-
 1.1 முதலெழுத்துக்கள் இறுதியில் வருமாறு முதலெழுத்துக் களுடன் பெயர் (ஆங்கிலத்தில்) :-----.
 (உதாரணம் SILVA, B.A.)
 1.2 முழுப் பெயர் (தமிழில்) :-----.
 1.3 தேசிய அடையாள அட்டை இலக்கம் :-----.

2. முகவரி :-
 2.1 தனிப்பட்ட :-----.
 2.2 அலுவலக :-----.
 2.3 தபால் முகவரி :-----.

3. 3.1 பால் (உரிய அடைப்பில் அடையாளம் இடுக) :-
 ஆண்
 பெண்
 3.2 பிறந்த திகதி :-
 ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐
 3.3 விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் முடிவுத் திகதியன்று வயது :-
 வருடங்கள் ☐☐☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐
 3.4 குடியியல் நிலை
 (உரிய அடைப்பில் அடையாளம் இடுக) :
 விவாகமானவர் :
 விவாகமாகாதவர் :

4. கல்வித் தகைமைகள் :-----.
 4.1 க. பொ. த. (உயர்தரப்) பரீட்சை :-
 வருடம் :-----. மாதம் :-----.

| விடயம் | பெற்ற தரம் | சுட்டெண் |
|---|---|---|
| | | |

 4.2 (அ) கால்நடை வளர்ப்பு டிப்ளோமா பெறப்பட்ட நிறுவகம் :-----.
 (ஆ) கால்நடை வளர்ப்பு டிப்ளோமா பெற்ற திகதி :-----.

5. தற்போதைய தொழில் மற்றும் முன்னைய நியமனங்கள் (இருப்பின்) மாத்திரம் :-----.

| பதவி | நிறுவனம் | முதல் | வரை |
|---|---|---|---|
| | | | |

6. பரீட்சைக் கட்டணம் செலுத்திய தபால் பணிமனையின் பெயர் : -----.
 காசுக்கட்டளை இலக்கம் :-----.

பரீட்சைக் கட்டணமாக 300 ரூபாவினை தீவின் எந்தவொரு தபால் பணிமனையிலும் செலுத்தி 'கால்நடை உற்பத்தி, சுகாதார பணிப்பாளர் நாயகம்' எனும் பெயரில் செலுத்தவும்.
மாற்றக்கூடிய பணிமனை – பேராதனை

பற்றுச்சீட்டினை இங்கு ஒட்டவும்.

7. இவ்விண்ணப்பத்தில் என்னால் முன்வைக்கப்பட்ட விடயங்கள் உண்மையானதும் சரியானதும் என்பதை உறுதியுரைக்கின்றேன். இங்கு தரப்பட்டுள்ள விபரங்களில் ஏதாவது உண்மையற்றது

அல்லது பிழையானதுஎன நான் தெரிவு செய்வதற்கு முன் அறியப்படுமிடத்து நான் தகைமையற்றவனாகுவதுடன், தெரிவு செய்த பின்னர் அவ்வாறு தெரியப்படுமிடத்து எத்தகைய நட்டஈடும் வழங்கப்படாது சேவையில் இருந்து நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

-----,
விண்ணப்பகாரரது கையொப்பம்.

திகதி :-----.

(தற்போது அரசாங்க சேவையில் உள்ளவர்களுக்கு மாத்திரம்)

**திணைக்களத் தலைவரினது சான்றிதழ்**

உத்தியோகத்தரால் மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் பரீட்சிக்கப்பட்டது எனவும் அவை சரியானது எனவும் இவ்வுத்தியோகத்தர் மேற்குறிப் பிடப்பட்ட பதவியின் பொருட்டு தெரிவு செய்யப்படுமிடத்து அவர் தற்போது வகிக்கும் பதவியில் இருந்து விடுவிப்புச் செய்ய முடியும்/ முடியாது எனவும் சான்றுபடுத்துகின்றேன்.

-----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.
(அலுவலக முத்திரை)

பதவிப் பெயர் :-----.
முகவரி :-----.
திகதி :-----.

10-379

---

**கால்நடைவள அபிவிருத்தி அமைச்சு**

கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம்

**இலங்கை தொழில்நுட்ப சேவையின் II ஆம் வகுப்பு "ஆ" தரத்திற்கு ஆராய்ச்சி உதவியாளர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல் - 2009**

கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் இலங்கை தொழில்நுட்ப சேவையின் II ஆம் வகுப்பு "ஆ" தரத்திற்கு ஆராய்ச்சி உதவியாளர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான போட்டிப் பரீட்சையின் பொருட்டு கால்நடை உற்பத்தி, சுகாதார பணிப்பாளர் நாயகத்தினால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. **பரீட்சை**.- இப்பரீட்சை 2009, நவெம்பர் மாதம் கால்நடை உற்பத்தி சுகாதார பணிப்பாளர் நாயகத்தினால் கண்டியில் நடாத்தப்படும். இப்பரீட்சையினை ஒத்திப்போடுவதற்கும் அல்லது இரத்துச் செய்வதற்கும் கால்நடை உற்பத்தி, சுகாதார பணிப்பாளர் நாயகத்திற்கு அதிகாரம் உண்டு.

3. **சேவை நிபந்தனைகள்**.- அரசாங்க சேவையில் நியமனங்களைக் கட்டுப்படுத்தும் பொது நிபந்தனைகளுக்கும் இங்கு கீழ் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கும் அமைவாக தொழில்நுட்ப உதவியாளர் சேவையின் II ஆம் வகுப்பு "ஆ" தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படும் :-

(i) தீவின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்கு உட்படுத்தப் படுவர் என்ற நிபந்தனையின் பேரிலேயே உத்தியோகத்தர் நியமிக்கப்படுவார்.

(ii) திறந்த ஆட்சேர்ப்பின் கீழ் நியமிக்கப்படும் உத்தியோகத்தர்கள் மூன்று வருட தகுதிகூர் காலத்திற்கு உட்படுதல் வேண்டும். அரசாங்க சேவைப்பதவி ஒன்றில் உறுதிப்படுத்தப்பட்ட உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்படுவாரேயாயின் அது தொடர்பில் நியமனமானது ஒரு வருட பரீட்சார்த்த காலப்பகுதிக்கு உட்பட்டதாக அமையும். திறந்த ஆட்சேர்ப்பின் கீழ் நியமிக்கப்படும் உத்தியோகத்தர்கள் அத்தகைய பதவியில் உறுதிப்படுத்துவதற்கு முன்னர் விதித்துரைத்த முதலாவது வினைத்திறன் தடைப்பரீட்சையில் சித்தி எய்துதல் வேண்டும்.

(iii) அரசாங்க சேவைக்கு ஈர்ப்புச் செய்துகொள்ளப்படுகின்ற உத்தியோகத்தர்கள் யாவரும் சேவையில் சேர்த்துக் கொள்ளப்பட்ட அரசகரும மொழிக்கும் மேலாக ஏனைய அரசகரும மொழித் தொடர்பிலுமான திறனை சேவையில் சேர்ந்து 5 வருடத்தினுள் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

(iv) நியமனம் பெறும் உத்தியோகத்தர்கள் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பணிப்புரையிற்கும் தாபன விதிக் கோவையின் ஒழுங்குவிதிகளுக்கும் நிதிப்பிரமாணத்திற்கும் அரசாங்கத்தால் அவ்வப்போது பிறப்பிக்கப்படுகின்ற பிரமாணங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் அமைச்சு மற்றும் திணைக்களம் என்பவற்றின் பணிப்புரைகளுக்கும் கட்டுப் படுதல் வேண்டும்.

4. **சம்பளத்திட்டம்**.- MN-3-2006 A – ஆராய்ச்சி உதவியாளர் சேவையின் II "அ" தரத்திற்கு - ரூபா 15,005 – 4x 180 –6 x 240 – 11 x 320 – 20x 360 – ரூபா 27,885. (பொ. நி. சு. 7/2008 இற்கு அமைய மாதாந்தம்)

இச்சம்பளத் திட்டத்தில் ரூபா 15,005 – 4 x 180- 6x240- ரூபா 17,165 சம்பளப் படிமுறையும் இத்தரத்திற்கு உரியதாகும்.

வகுப்பு II "ஆ" வில் உள்ள உத்தியோகத்தர்கள் இயைபுடைய வேதன அளவுத்திட்டத்தின் மூன்றாம் வேதன அளவு நிலையை எய்துவதற்கு முன்னர் முதலாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சையிலும் சித்தியடைதல் வேண்டும்.

5. **வயதெல்லை**.- (i) விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி அன்று வயது 18 இற்குக் குறையாமலும் 45 இனை விஞ்சி விடாமலும் இருத்தல் வேண்டும். (உச்ச வயதெல்லை ஏலவே அரசாங்க சேவையில் உள்ளவர்களுக்கு ஏற்புடையதாகாது).

(ii) விண்ணப்பகாரர் அனைவரும் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(iii) தேகாரோக்கியமுடையவர்களாக இருத்தல் வேண்டும்.

6. **கல்வித் தகைமைகள்**.- இலங்கை கால்நடை வளர்ப்பு பாடசாலையில் இருந்து டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.

அத்துடன்

இரசாயனவியல், விவசாய விஞ்ஞானம் மற்றும் உயிரியல் விஞ்ஞானம் போன்ற பாடங்களுள் இரண்டு பாடங்களுடன் விஞ்ஞானப் பாடங்கள் மூன்றில் க. பொ. த. (உ/த) பரீட்சையில் ஒரே தடவையில் சித்தியடைந்து இருத்தல்.

அத்துடன்

மொழி அல்லது இலக்கியம் மற்றும் எண்கணிதம்/ கணிதப் பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஆறு பாடங்களில் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது சித்தியடைந்து இருத்தல்.

அல்லது

அதற்குச் சமமானதோர் பரீட்சையில் சித்தியடைந்து இருத்தல் வேண்டும்.

**குறிப்பு**.- இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் இருந்து டிப்ளோமா பெற்றுள்ளவர்கள் அப்பல்கலைக்கழகத்தில் அந்த டிப்ளோமாவிற்குரிய அடிப்படை பாடநெறியில் சித்தியடைந்து இருப்பின் க. பொ. த. (சா. த.)ப் பரீட்சையில் சித்தியடைய வேண்டும் என்பதில் இருந்து விடுவிப்புச் செய்யப்படுவர்.

7. **ஆட்சேர்ப்பு முறைமை.**- ஆரம்பத் தகைமைகளைப் பெற்றிருக்கும் விண்ணப்பக்காரர் கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தினூடாக நடாத்தப்படுகின்ற பொதுப் போட்டிப் பரீட்சையில் அமர்தல் வேண்டும்.

(i) பொதுப் போட்டிப் பரீட்சைக்குரிய அனைத்து வினாப்பத்திரத்திலும் 40% புள்ளிகளை அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றுக்கொள்கின்ற விண்ணப்பக்காரர் நேர்முகப் பரீட்சைக்கு திறமை அடிப்படையில் அழைக்கப்படுவர். நேர்முகப் பரீட்சைக்காக எவ்வித புள்ளிகளும் வழங்கப்படமாட்டாது. தகைமைகளை உறுதி செய்துகொண்டு விண்ணப்பகாரர் பரீட்சையின்போது பெற்றுக்கொள்ளப்பட்ட மொத்தப் புள்ளிகளின் அடிப்படையில் திறமை ஒழுங்கில் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும்.

8. **பரீட்சை :**

(i) இப்பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலங்களில் நடாத்தப்படும்.

(ii) விண்ணப்பக்காரர் தான் விரும்பும் மொழி மூலத்தில் பரீட்சைக்குத் தோற்றலாம்.

(iii) பரீட்சையின்போது மொழி மூலத்தினை எக்காரணம் கொண்டும் மாற்றம் செய்வதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

(iv) பரீட்சைக் கட்டணம் ரூபா 300 .- கால்நடை உற்பத்தி, சுகாதார பணிப்பாளர் நாயகத்தின் பெயரிற்கு வழங்கப்படுகின்ற பேராதனையில் அமைந்துள்ள தபால் கந்தோரில் மாற்றத்தக்கவாறு பெற்றுக் கொள்ளப்பட்ட காசுக்கட்டளை உரிய இடத்தில் ஒட்டி அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

(v) பரீட்சைப் பாடங்கள் :- பரீட்சை இரண்டு வினாத்தாள்களைக் கொண்டது.
- (அ) விவேகம்
- (ஆ) தொழில்நுட்பவியல்

(vi) பாடத்திட்டம் :

(அ) விவேகப் பரீட்சை (நேரம் : 1 மணித்தியாலம்)- மொத்தப் புள்ளிகள் 100.
இதில் விண்ணப்பக்காரர் தர்க்கரீதியாக சிந்திக்கும் ஆற்றல் அவரது சிந்தனையின் பகுப்பாய்வு அம்சங்கள், தீர்மானம் எடுக்கும் திறன், சீர்தூக்கிப் பார்க்கும் வல்லமை என்பன அடங்கலான வினாக்கள் உள்ளடக்கப்பட்டிருக்கும்.

(ஆ) தொழில்நுட்பவியல் (நேரம் : 1 மணித்தியாலம்)- மொத்தப் புள்ளிகள் 100.
இவ்வினாப்பத்திரத்தில் பின்வரும் விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கும் :-

(i) ஆய்வுகூட உபகரணங்களை இனங்காணுதலும் அவற்றினை பராமரித்தலும்

(ii) நோயை கண்டறியும் பொருட்டு செய்யப்பட வேண்டிய ஆய்வு முறைகள் :
நோயியல் (Pathology)
ஒட்டுண்ணியியல் (Parasitology)
நுண்ணுயிரியல் (Microbiology)
நீர்பாயவியல் (Serology)
போஷணை (Nutrition)

(iii) தரத்தினை நிர்ணயிக்க மேற்கொள்ளப்படும் ஆய்வு முறைகள்
பௌதீகப் பரிசோதனை
இரசாயனப் பரிசோதனை
புலன் பரிசோதனை

(iv) ஆய்வுகூடத்தைக் கவனமாகப் பேணுதல், கிருமி அழித்தல்.

(v) மாதிரி பெற்றுக்கொள்ளல், களஞ்சியப் படுத்தல் கொண்டுசெல்லல்.

9. **விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படும் முறை.**- (i) இவ்வறிவித்தலுக்கு அமைவாக இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய 8 1/2" x 12" அளவிலான A4 கடதாசியில் இரு பக்கங்களினையும் பிரயோகித்து தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் 2009.10.23 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கத்தக்கவாறு "பணிப்பாளர் நாயகம், கால்நடை உற்பத்தி, சுகாதாரத் தணிக்களம், த. பெ. இலக்கம் 13, கெடம்பே, பேராதனை" எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பத்தை உள்ளிட்டு அனுப்பும் கடிதவுறையின் இடதுபக்க மேல் மூலையில் "ஆராய்ச்சி உதவியாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சை" எனும் வாசகம் தெளிவாக எழுதப்படுதல் வேண்டும். விண்ணப்ப முடிவுத் திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**குறிப்பு.**- அரசாங்க சேவையில் உள்ள விண்ணப்பக்காரர் தமது விண்ணப்பங்களைத் திணைக்களத் தலைவரினூடாக சமர்ப்பித்தல் வேண்டும்.

(ii) சகல தேவைப்பாடுகளையும் பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். தபாலிடுகையின்போது விண்ணப்பங்கள் காணாமல் போதல் அல்லது தாமதமாகி விடுதல் போன்ற எவ்வித முறைப்பாடுகளும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

(iii) விண்ணப்பங்கள் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது. விண்ணப்பக்காரருக்கு பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் பரீட்சை ஆரம்பிப்பதற்கு 4 நாட்களுக்கு முன்னர் கிடைக்கப்பெறாதவிடத்து பின்வரும் விபரங்களுடன் உடனடியாக கால்நடை உற்பத்தி சுகாதார சேவைப் பணிப்பாளர் நாயகத்துடன் தொடர்பு கொள்க :-
- (அ) விண்ணப்பக்காரரது முழுப்பெயர் ;
- (ஆ) முகவரி ;
- (இ) விண்ணப்பம் தபாலிட்ட திகதி, பதிவு இலக்கம், தபாற் பணிமனை.

10. விண்ணப்பக்காரர் பின்வரும் ஆவணங்களின் ஒளிப்படப் பிரதியினை (photo copy) விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும் :-
- (அ) பிறப்பு அத்தாட்சிப்பத்திரம்
- (ஆ) கல்வித் தகைமைகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள்.

**விண்ணப்பக்காரரது ஆளடையாளம்.**- பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பக்காரர் யாவரும் பரீட்சை நிலையத்தில் தமது ஆளடையாளத்தினை பரீட்சை நிலைய பொறுப்பதிகாரி திருப்தியுறும் வகையில் உறுதிப்படுத்துதல் வேண்டும். அதன்பொருட்டு பின்வருவன ஏற்றுக்கொள்ளப்படும் :-
- (அ) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை
- (ஆ) ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய கடவுச்சீட்டு (பரீட்சை தினத்திற்கு 3 வருடத்திற்கு முன்னர் வழங்கப்பட்டதாக இருத்தல் வேண்டும்)

**பிழையான தகவல்களை வழங்குதல்.**- இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு விண்ணப்பக்காரர் உரிய தகைமைகளைக் கொண்டிராமை கண்டுபிடிக்கப்பட்டால் பரீட்சைக்கு முன்னர், பரீட்சையின்போது அல்லது பரீட்சையின் பின்னர் எச்சந்தர்ப்பத்திலாயினும் அவருடைய விண்ணப்பத் தகைமை இரத்துச் செய்யப்பட

இடமுண்டு. விண்ணப்பகாரர் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்கள் ஏதாவது பிழையானது என தெரிந்திருந்தும் சமர்ப்பித்து இருப்பாராயின் அவர் சேவையில் நின்றும் நிறுத்தப்படுவதற்கு இடமுண்டு.

இவ்வர்த்தமானி பத்திரிகையில் பகுதி I : தொகுதி (II அ) இன் ஆரம்பத்தில் காட்டப்பட்டுள்ள அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடையதாகும் பொது நிபந்தனை மற்றும் பரீட்சார்த்திகளுக்கான விதிகள் அறிவுறுத்தல்கள்பால் உங்கள் கவனத்தை ஈர்ப்பதுடன் அவற்றினை பின்பற்றவும்.

11. இவ்வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்படாத ஏதாவது விடயம் தொடர்பில் பிரச்சினைகள் ஏற்படுமாயின் அது தொடர்பிலும் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் கால்நடை உற்பத்தி சுகாதார சேவை பணிப்பாளர் நாயகத்திற்கே உரியதாகும். அதுவே இறுதித் தீர்வாகும்.

எச். எம். எஸ். பி. ஹேரத்,
கால்நடை உற்பத்தி, சுகாதார
சேவைப் பணிப்பாளர் நாயகம்.

கால்நடை உற்பத்தி, சுகாதார சேவைத் திணைக்களம்,
பேராதனை,
2009, புரட்டாதி 15.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**கால்நடைவள அபிவிருத்தி அமைச்சு**

**கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம்**

*இலங்கை தொழில்நுட்ப சேவையின் II ஆம் வகுப்பு 'ஆ' தரத்திற்கு ஆராய்ச்சி உதவியாளர்களை ஆட்சேர்ப்புச் செய்யும் பொருட்டான விண்ணப்பம்*

| |
|---|
| |

அலுவலக உபயோகத்திற்கு

| பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் | |
|---|---|

(உரிய இலக்கத்தை அடைப்பில் எழுதுக)
சிங்களம் - 02
தமிழ் - 03
ஆங்கிலம் - 04

1. பெயர் :-
   1.1 முதலெழுத்துக்கள் இறுதியில் வருமாறு முதலெழுத்துக் களுடன் பெயர் (ஆங்கிலத்தில்) :-----.
   (உதாரணம் SILVA, B.A.)
   1.2 முழுப் பெயர் (தமிழில்) :-----.
   1.3 தேசிய அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

2. முகவரி :-
   2.1 தனிப்பட்ட :-----.
   2.2 அலுவலக :-----.
   2.3 தபால் முகவரி :-----.
3. 3.1 பால் (உரிய அடைப்பில் அடையாளம் இடுக) :-

| | |
|---|---|
| ஆண் | |
| பெண் | |

3.2 பிறந்த திகதி :-

ஆண்டு : | | | | | மாதம் : | | | திகதி : | | |

3.3 விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் முடிவுத் திகதியன்று வயது :-

வருடங்கள் : | | | | | மாதங்கள் : | | | நாட்கள் : | | |

3.4 குடியியல் நிலை (உரிய அடைப்பில் '✓' அடையாளம் இடுக):-

| | |
|---|---|
| விவாகமானவர் : | |
| விவாகமாகாதவர் : | |

4. கல்வித் தகைமைகள் :-
   4.1 க. பொ. த. (சா. த.) பரீட்சை :- வருடம் :-----. மாதம் :-----.

| விடயம் | பெற்ற தரம் | சுட்டெண் |
|---|---|---|
| | | |

4.2 க. பொ. த. (உ/த) பரீட்சை :- வருடம் :-----. மாதம் :-----.

| விடயம் | பெற்ற தரம் | சுட்டெண் |
|---|---|---|
| | | |

4.3 (அ) கால்நடை வளர்ப்பு டிப்ளோமா பெறப்பட்ட நிறுவகம் :-----.
(ஆ) கால்நடை வளர்ப்பு டிப்ளோமா பெற்ற திகதி :-----.

5. தற்போதைய தொழில் மற்றும் முன்னைய நியமனங்கள் (இருப்பின்) மாத்திரம் :-

| பதவி | நிறுவனம் | முதல் | வரை |
|---|---|---|---|
| | | | |

6. பரீட்சைக் கட்டணம் செலுத்திய தபால் பணிமனையின் பெயர் :-----.
   காசுக்கட்டளை இலக்கம் :-----.

| |
|---|
| பரீட்சைக் கட்டணமாக 300 ரூபாவினை தீவின் எந்தவொரு தபால் பணிமனையிலும் செலுத்தி 'கால்நடை உற்பத்தி, சுகாதார பணிப்பாளர் நாயகம்' எனும் பெயருக்கு செலுத்தவும். மாற்றக்கூடிய பணிமனை – பேராதனை<br>பற்றுச்சீட்டினை இங்கு ஒட்டவும். |

7. இவ்விண்ணப்பத்தில் என்னால் முன்வைக்கப்பட்ட விடயங்கள் உண்மையானதும் சரியானதும் என்பதை உறுதியுரைக்கின்றேன். இங்கு தரப்பட்டுள்ள விபரங்களில் ஏதாவது உண்மையற்றது அல்லது பிழையானது என நான் தெரிவு செய்வதற்கு முன் அறியப்படுமிடத்து நான் தகைமையற்றவனாகுவதுடன், தெரிவு செய்த பின்னர் அவ்வாறு தெரியப்படுமிடத்து எத்தகைய நட்டஈடும் வழங்கப்படாது சேவையில் இருந்து நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

-----,
விண்ணப்பகாரரது கையொப்பம்.

திகதி :-----.

(தற்போது அரசாங்க சேவையில் உள்ளவர்களுக்கு மாத்திரம்)

**திணைக்களத் தலைவரினது சான்றிதழ்**

உத்தியோகத்தரால் மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் பரீட்சிக்கப் பட்டது எனவும் அவை சரியானது எனவும் இவ்வுத்தியோகத்தர் மேற்குறிப்பிடப்பட்ட பதவியின் பொருட்டு தெரிவு செய்யப்படுமிடத்து அவர் தற்போது வகிக்கும் பதவியில் இருந்து விடுவிப்புச் செய்ய முடியும்/ முடியாது எனவும் சான்றுபடுத்துகின்றேன்.

-----,
திணைக்களத் தலைவர்.
(அலுவலக முத்திரை)

பதவிப் பெயர் :-----.
முகவரி :-----.
திகதி :-----.

10-380

---

**இலங்கை சமுர்த்தி அதிகாசபை**

**சமுர்த்தி முகாமையாளர்களுக்கான IIவது வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை - 2009**

1. இலங்கை சமுர்த்தி அதிகாரசபையின் V ஆம் மற்றும் VI ஆம் தர சமுர்த்தி முகாமையாளர்களுக்கான II ஆவது வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் 2009, திசெம்பர் மாதத்தில் கொழும்பில் நடாத்தப்படும். இப்பரீட்சையில் Iஆவது வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையில் தேறிய சமூர்தந்தி முகாமையாளர்கள் அமரமுடியும்.

2. **பரீட்சை முறையும் பாடத்திட்டமும்.**- இந்த வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையானது 3 மணித்தியால வினாத்தாளைக் கொண்டதாகும். மொத்தப்புள்ளிகளின் எண்ணிக்கையானது 100 ஆகும். என்பதுடன் சித்தி பெறும் பொருட்டு பெறவேண்டிய ஆகக்குறைந்த புள்ளிகள் 40 ஆகும்.

இலங்கையின் கிராமிய மற்றும் பிரதேச அபிவிருத்திகள் உள்ளடங்கிய நிகழ்கால அபிவிருத்தி நடவடிக்கைகள், இலங்கையில் வணி வங்கிகளும் நிதி நடவடிக்கைகளும் சமூக அபிவிருத்தி நடவடிக்கைகளை மேம்படுத்துதல், வறுமை ஒழிப்பு, சமுர்த்தி வேலைத்திட்டத்தினை கட்டியெழுப்புதல், மகிந்த சிந்தனை வேலைத்திட்டத்தின் கீழ் கமநெகும வேலைத்திட்டம் உள்ளடங்கிய விண்ணப்பதாரிகளின் படைப்பாக்க ஆற்றலையும் தெளிவினையும் அளவை செய்து பார்ப்பதற்காகத் தயாரிக்கப்பட்ட ஒரு வினாத்தாளாகும்.

3. இப்பரீட்சையானது, சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய மொழிகளில் மாத்திரம் நடைபெறும். இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் மாதிரி விண்ணப்பப் படிவமொன்று இந்த அறிவித்தலின் இறுதியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. இந்த மாதிரி விண்ணப்பப்படிவத்தின் பிரகாரம் விண்ணப்பதாரிகள் தங்களது விண்ணப்பப்படிவங்களை தயாரித்துக் கொள்ளல் வேண்டும். A4 அளவிலான தாள்களில் மட்டுமே விண்ணப்பப்படிவங்கள் தயாரிக்கப்படவேண்டும். விண்ணப்பதாரி பரீட்சைக்குத் தோற்றும் மொழியிலேயே விண்ணப்பப்படிவங்கள் பூரணப்படுத்தப்படல் வேண்டும். விண்ணப்பிக்கும் மொழியினை பின்னர் மாற்றம் செய்வதற்கு இடமளிக்கப்படமாட்டாது. விண்ணப்பப்படிவத்தின் தலைப்பு இலக்கம் 1.0 தொடக்கம் 6.0 வரை முதலாம் பக்கத்திலும் எஞ்சியவை இரண்டாம் பக்கத்திலும் அமையும் விதத்தில் தயாரிக்கப்படல் வேண்டும் என்பதுடன் அதற்குரிய தகவல்களை தங்களது கையெழுத்தினாலேயே தெளிவாக பூரணப் படுத்தப்படல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கு ஏற்ற விதத்தில் அமையாத விண்ணப்பப் படிவங்களும் பூரணமில்லாத விதத்தில் தகவல்கள் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பப் படிவங்களும் எதுவித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். அவ் விண்ணப்பப் படிவத்தின் போட்டோப் பிரதியொன்றினை தங்களிடம் வைத்துக் கொள்வது பயனுள்ளதாக அமையும். விண்ணப்பப்படிவத்தை தயாரிக்கும் போது அங்கு தலைப்பு குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்களத்துக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடப்படல் வேண்டும்.

4. விண்ணப்பப்படிவங்களை தங்களது பிரிவுத் தலைவரின் ஊடாக (மாவட்ட செயலாளர்/ பிரதேச செயலாளர் பிரிவுகளில் இணைக்கப்பட்டிருப்பின் அதனை மாவட்டச்செயலாளர்/ மாவட்ட சமூர்த்திப் பணிப்பாளர்/ பிரதேச செயலாளர்கள்/ பிரதி சமூர்த்தி பணிப்பாளர்கள் ஊடாக) 2009.11.06 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் "பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பயிற்சிப்பிரிவு, பெலவத்தை, பத்தரமுல்லை" என்ற முகவரிக்குக் கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தினை அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பரீட்சையின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும். பரீட்சைக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். கடைசித் திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

5. விண்ணப்பதாரிகளுக்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்ட வுடனேயே அது தொடர்பில் பத்திரிகை அறிவித்தல் ஒன்று இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் வெளியிடப்படும். அறிவித்தல் வெளியாகி 2 அல்லது 3 நாட்கள் கழிந்ததன் பின்னர் அனுமதிப்பத்திரம் கிடைக்காவிடின், அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அதுபற்றி இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவித்தல் வேண்டும். தங்களிடம் வைத்துக்கொண்டுள்ள விண்ணப்பப்படிவத்தின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியினையும், பதிவு செய்த பற்றுச் சீட்டினையும் கொழும்புக்கு தூரமான பிரதேசம் ஒன்றாயின் அனுமதிப்பத்திரத்தினை அனுப்பும் பொருட்டு தொலைநகல் இலக்கம் ஒன்றினையும் குறிப்பிட்டு உங்களது கோரிக்கைக் கடிதத்தினையும் வைத்துக்கொண்டு இலங்கைப் பரீட்சை திணைக்களத்திற்கு அறிவிப்பது மிகப்பயனுள்ளதாகும்.

6. பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தினுள் தாம் தோற்றும் சகல பாடங்களுக்கும் மண்டப அதிபதி திருப்திப்படக்கூடிய வகையில் தமது அடையாளத்தை உறுதிப்படுத்துதல் வேண்டும். அதற்காக பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும் :-

(1) ஆட்பதிவு ஆணையாளரினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை ;

(2) செல்லுபடியாகும் வெளிநாட்டுக் கடவுச்சீட்டு (பாஸ்போட் அனுமதிப்பத்திரம்).

7. இப்பரீட்சை நடாத்துவது சம்பந்தமாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விடுக்கப்படும் சட்ட விதிகளுக்கு பரீட்சைக்கான விண்ணப்பதாரிகள் உட்படுவர். அந்த சட்ட விதிகள் மீறப்பட்டால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு அவன்/அவள் உள்ளாக வேண்டிவரும். விண்ணப்பதாரி ஒருவருக்கு பரீட்சை அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவது அவன்/அவள் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகுதிகளை கொண்டுள்ளதற்கு அங்கீகாரமாக கருதலாகாது.

8. இப்பரீட்சைக்கு தோற்றுவதற்காக விண்ணப்பித்துள்ள சகலருக்கும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அனுமதிப்பத்திரம் அனுப்பப்படும் என்பதுடன் அவர்களுக்குத் தங்களது அலுவலகத் தலைவரினால் உத்தியோக விடுமுறை வழங்கப்படல் வேண்டும். பரீட்சை நடைபெறும் தினத்தன்று தனது கையொப்பத்தினை உறுதிப்படுத்திக் கொண்ட அனுமதிப்பத்திரத்தினை மண்டப அதிபதிக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

9. இந்த விதிமுறைகளுக்கு உட்படாத ஏதேனும் விடயமொன்றிருப்பின், இலங்கை சமுர்த்தி அதிகாரசபை பணிப்பாளர் சபையின் விருப்பத்தின் பிரகாரம் அது தொடர்பில் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

(சட்டத்தரணி) ஆர். பீ. பி. திலகசிரி,
பணிப்பாளர் நாயகம்.

இலங்கை சமுர்த்தி அதிகாரசபை,
4 ஆம் மாடி, "செத்சிரிபாய",
பத்தரமுல்லை.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை சமுர்த்தி அதிகாரசபை**

*சமுர்த்தி முகாமையாளர்களுக்கான II ஆவது வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை - 2009*

[ ]
அலுவலக உபயோகத்துக்கு

பரீட்சைக்குத் தோற்றும் மொழி :-
சிங்களம் - 2,
தமிழ் - 3 [ ]

(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)

1. பெயர் :-
   1.1 முதலெழுத்துக்கள் இறுதியாக வரும் விதத்தில் முதலெழுத்துக்களுடன் பெயர் :-----.
   (ஆங்கிலக் கெப்பிற்றல் எழுத்தில்)
   (உதா.: SILVA, A. B.)
   1.2 முழுப் பெயர் :-----.
   (ஆங்கிலக் கெப்பிற்றல் எழுத்தில்)
   1.3 முழுப் பெயர் :-----.
   (சிங்களத்தில்/தமிழில்)
2. நிரந்தர முகவரி :-----.
   (ஆங்கிலக் கெப்பிற்றல் எழுத்தில்)
   2.1 நிரந்தர முகவரி :-----.
   (சிங்களத்தில்/தமிழில்)
   2.2 அலுவலக முகவரி (ஆங்கிலக் கெப்பிற்றல் எழுத்தில்) : -----.
3. பால் (பெண்/ஆண்) :
   பெண் - 1, ஆண் - 0 [ ]
   (உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)
4. விவாகமானவரா/விவாகமாகாதவரா :-
   விவாகமாகாதவர் - 1, விவாகமானவர் - 2 [ ]
   (உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)
5. தேசிய ஆளடையாள அட்டை இல.: [ | | | | | | | | | ]
6. பிறந்த திகதி :
   ஆண்டு : [ | | | ] மாதம் : [ | ] திகதி : [ | ]
7. விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று வயது:
   வருடங்கள் : [ | | | ] மாதங்கள் : [ | ] நாட்கள் : [ | ]
8. பதவியும் தரமும் :-----.
9. முதலாவது வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையில் தேறிய ஆண்டு [ | | | ]

மேலே குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் உண்மையானவை எனவும் விண்ணப்பித்துள்ள மொழியில் பரீட்சைக்குத் தோற்ற உரிமையுள்ளது எனவும் கூறிக்கொள்கின்றேன். மேலும் பரீட்சை நடாத்துவது தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பிறப்பிக்கப்படுகின்ற சட்டவிதிகளுக்கு இசைவதாகவும் அறிவித்துக்கொள்கின்றேன்.

-----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----.

பரீட்சை ஆணையாளர் நாயகம்,

சமர்ப்பிக்கின்றேன்.

மேலுள்ள விபரங்களைக் கொண்டுள்ள விண்ணப்பதாரிக்கு இப்பரீட்சையில் பரீட்சார்த்தியாகுவதற்குத் தகுதியுள்ளது எனவும் அவரால் குறிப்பிடப்பட்டுள்ள மொழியில் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அவர் தகுதியுள்ளவர் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

-----,
பிரிவு/மாவட்டத் தலைவரின் கையொப்பம்.
பதவிப் பெயரும் உத்தியோக முத்திரையும்.

திகதி :-----.

10-332

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.